உ

சிவமயம்



யாழ்ப்பாணம் திருநெல்வேலியை பிறப்பிடமாகவும்

நல்லூரை வதிவிடமாகவும்

பிரான்ஸ், கொழும்பை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட

ஆசிரியரும், புல்லாங்குழல் வித்துவானுமாகிய கலாபூஷணம்

# அமரர் அருணாசலம் நமசிவாயம்

அவர்களின்

சிவப்பதப்பேறு குறித்த 31ம் நாள்

# நினைவு மலர்

உ

சிவமயம்



யாழ்ப்பாணம் திருநெல்வேலியை பிறப்பிடமாகவும்
நல்லூரை வதிவிடமாகவும்
பிரான்ஸ், கொழும்பை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட
ஆசிரியரும், புல்லாங்குழல் வித்துவானுமாகிய
கலாபூஷணம்

# அமரர் அருணாசலம் நமசிவாயம்

அவர்களின்
சிவப்பதப்பேறு குறித்த 31ம் நாள்

# நினைவு மலர்

16.01.2014

# சமர்ப்பணம்

அன்பாலும் பண்பாலும்
இனிய புன்னகையாலும்
அனைவர் இதயத்திலும்
நிறைந்த எம் அன்புத் தெய்வமே!
அன்பின் விருட்சமாகி, பாச நிழல் பரப்பி
பண்பின் வழிகாட்டி அரவணைப்பில்
நேசக்கரம் நீட்டி ஆதரித்த பெருநெஞ்சே
எங்கள் உள்ளத்தில் என்றும் நிலைத்திருக்கும்
அன்புத் தெய்வமான எம் அருமை
அப்பாவின் பொன்னடிக்கு காணிக்கையாக
இம்மலரினை சமர்ப்பிக்கின்றோம்.

மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்
மற்றும் குடும்பத்தினர்

உ
சிவமயம்



பிறப்பு 17 02 1925

இறப்பு 17 12 2013

# அமரர்
# அருணாசலம் நமசிவாயம்

## திதி நிர்ணய வெண்பா

விஜயவருஷ மார்கழிதனில் குசன் உற்றவேளை
உதயமதில் அருணாசலம் பெற்ற நமசிவாயத்தான்
நடேசர்பாதம் உற்றவேளைதனில்
உற்றறி திதி பூரண எனச்செப்புதனை



# அமரர் அருணாசலம் நமசிவாயம்
## அவர்களின்
# வாழ்க்கைப் பதிவுகள்

குடும்பத்தின் குலவிளக்காய், தோற்றத்தின் சுடரொளியாய், அன்பின் இருப்பிடமாய், பாசத்தின் உறைவிடமாய், கருணையின் வடிவாய் நம் மத்தியில் வாழ்ந்த கொக்குவில் இந்துக்கல்லூரி, கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி ஆசிரியராகவும், புல்லாங் குழல் வித்துவானுமாக விளங்கிய ''கலாபூஷணம் வேணுகானமணி'' திருவாளர் அருணாசலம் நமசிவாயம் அவர்களின் திடீர் மறைவு எம் எல்லோருக்கும் ஈடுசெய்ய முடியாத ஓர் பேரிழப்பாகும். அவர் போல் எல்லோர் நெஞ்சிலும் வாழ்ந்தவர்கள் ஒரு சிலரே. அன்னாரின் மறைவு அவருடன் தொடர்பு கொண்ட யாவரையும் ஆற்றாத் துயரத்தில் ஆழ்த்தியுள்ளது. பண்புடையார் தொடர்பை இலகுவில் மறப்பது எவர்க்கும் கடினம்.

மேலும் அமரர்.நமசிவாயம் அவர்கள் சமுதாயத்தில் எப்படிப் பயனுறவாழ வேண்டும் என்பதை வாழ்ந்துகாட்டிய பெருமகன். இவரின் கலைப்பணியும், கல்விப்பணியும், சமயப்பணியும், சமூகப்பணியும் அளப்பரியன. அவரின் வாழ்க்கையின் சிறப்புக்கு அவர் ஆற்றிய கலைப்பணியும் கல்விச் சேவையும் சான்று பகரும். வாழ்க்கையிலே அவர் ஓர் தலை சிறந்த கர்ம யோகியாக, கர்மவீரனாகத் திகழ்ந்தார். என் கடன் பணி செய்து கிடப்பதே என்னும் தத்துவத்தைக் கிடைசிவரை கடைப்பிடித்தார்.

''ஒன்றிலும் பற்றுவைக்காது செய்ய வேண்டியதைச் செய்'' என்ற கீதோபதேசம் இவரது வழிகாட்டியாக அமைந்ததினால் போலும் பலனை அடையாது செய்ய வேண்டியதைச் செய்யும் நெறிநின்று

தமது கல்விச் சேவையிலும், கலைப் பணியிலும், சமயத் துறையிலும், சமூகப் பணியிலும் உறுதியுடன் தாம் செய்ய வேண்டியதை இறுதி மூச்சுவரை செய்து உயர்வடைந்தார்.

இத்துடன் அமரர்.நமசிவாயம் ஒரு செயல் வீரர். நினைத்த கருமத்தை நிறைவேற்றி முடிக்கும் திறமைசாலி. அன்பினாலும், பண்பினாலும் சகலரையும் தன் பக்கம் இழுக்கும் சாதுரியம் இவரிடம் நிறையக் காணப்பட்டன. அத்துடன் கண்ணியம், கடமை, கட்டுப்பாடு, நிர்வாகத் திறமை ஆகிய நற்குணங்கள் இவருக்கு துணை புரிந்தன.

திருவாளர் நமசிவாயம் அவர்கள் வரலாற்றுச் சிறப்பும், பண்பும், ஞானச்செழிப்பும், கலையின் கவினும் கொண்டு, விஞ்ஞானிகளையும், மெஞ்ஞானிகளையும், பண்டிதர்களையும், சமய சமூக சேவையாளர் களையும், தலைசிறந்த கலைஞர்களையும், எழுத்தாளர்களையும் கொடைவள்ளல்களையும் வாழையடி வாழையாக ஈன்றெடுத்த யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருநெல்வேலியில் ஆசாரமும் அநுஷ்டானமும் மிகவும் நுணக்கமாகப் பேணப்பட்ட குடும்பத்தில் காலஞ்சென்ற அருணாசலம், நாகம்மா தம்பதிகளுக்கு 17.02.1925ம் ஆண்டு சிரேஷ்ட புத்திரனாகப் பிறந்தார்.

இவர் தமது ஆரம்ப கல்வியை திருநெல்வேலியில் அமைந்துள்ள சைவப்பிரகாசவித்தியாலயத்தில், அதன் பின்னர் பரமேஸ்வராக் கல்லூரியிலும் பயின்றார். தமது கல்லூரிப் படிப்பை முடித்துக் கொண்டு கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் போட்டிப் பரீட்சையின் மூலம் சித்தி யடைந்து ஒருவருடகாலம் பயிற்சி பெற்ற பின்னர் பலாலி ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் சேர்ந்து இரண்டு வருடங்கள் பயிற்சிபெற்று வெளிவந்து கொக்குவில் இந்துக் கல்லூரி, கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி ஆகியவற்றில் தமிழ், சரித்திரம், பூமிசாத்திரம், எண்கணிதம் ஆகிய பாடங்களை கல்விப் பொதுத்தராதர (O/L)

மாணவர்களுக்குக் கற்பித்தார். இவர் தனது ஆசிரியத் தொழிலை 1985ம் ஆண்டுவரை பெற்றோர், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் பாராட்டும் வகையில் மிகவும் திறமையாகச் செய்து வந்தார்.

மேலும் 1951ம் ஆண்டு; நல்லூர் பெருங்குடியிலே பிறந்த காலஞ்சென்ற செல்லத்துரை - பொன்னம்மா தம்பதியினரின் கனிஷ்ட புதல்வியான சிவமுத்து அவர்களைத் திருமணம் செய்தார். இவர்களின் இல்லறம் நல்லறமாக விளங்கி திருமதி.சிவசுந்தரி சிங்கராஜா (இலங்கை), திருமதி.கலாவதி தியாகராஜா(பிரான்ஸ்), திரு.வாசஸ்பதி (பிரான்ஸ்), திருமதி.தயாபரசுந்தரி மகேஷரத்தினம் (இலங்கை), திரு.தயாபரன்(கனடா), திருமதி.தர்மவதி சிவகுமார் (அமெரிக்கா), ஸ்ரீ.சத்திய நாராயணன்(பிரான்ஸ்) ஆகியோரைப் பிள்ளைகளாகப் பெற்று இன்பமாக வாழ்ந்து வந்தார்.

திரு.நமசிவாயம் அவர்கள் ஓர் தலை சிறந்த ஆசிரியராக விளங்கியதோடு, ஒர் புல்லாங்குழல் வித்துவானாகவும் திகழ்ந்தார். இவர் இனிய புல்லாங்குழல் இசையை தாமாகவே கற்றுக் கொண்டார். புல்லாங்குழல் இசையை மேலும் விருத்தி செய்வதற்கு கோயம்பூத்தூர் சென்று ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் இவ் இசையைக் கற்றார். இலங்கை திரும்பிய திரு.நமசிவாயம் அவர்கள் அன்றைய காலகட்டத்தில் நாதஸ்வர வித்துவானாக விளங்கிய S.P.M திருநாவுக்கரசிடம் கற்றார். இதைத் தொடர்ந்து 20 வருடங்களுக்கு மேலாக ஸ்ரீலங்கா ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் (SLBC) புல்லாங்குழல் வாசிக்கும் வித்துவானாகத் திகழ்ந்தார். இது மட்டுமன்றி அநேக பரதநாட்டிய கலைநிகழ்ச்சிகள், அரங்கேற்றங்கள் முதலிவற்றிற்கு 20 வருடங்களுக்கு மேலாக புல்லாங்குழல் வாசித்திருக்கிறார்.

திரு.நமசிவாயம் அவர்கள் 1958ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட அண்ணாமலை தமிழ் இசை மன்றத்தின் தலைவர், செயலாளராகவும்,

யாழ்ப்பாணத்தில் இயங்கிய ரசியரஞ்சனசபா என்ற மன்றத்தில் அங்கத்தவராகவும் பணிபுரிந்துள்ளார். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் பாமாலை, சைவநற்சிந்தனை, இசைச்சித்திரம் போன்ற நிகழ்ச்சிகளையும், அநேக பாடல்களையும் எழுதியுள்ளார். 1973ம் ஆண்டிலிருந்து 1983ம்ஆண்டு வரை குன்றத்துக் குமரன், வீணாகான போன்ற நிகழ்ச்சிகளையும் ஒலிபரப்புச் செய்துள்ளார். மேலும் அநேக கலை வித்துவான்களுக்கு பாராட்டுப்பத்திரமும் எழுதியுள்ளளர்.

இத்துடன் திரு.எஸ்.பி.எம்.திருநாவுக்கரவு இவரின் குருவாணார். திரு.நமசியாவம் அவர்கள் இலண்டன் வானொலியில் அநேக பேட்டிகள் அளித்துள்ளார். மேலும் இவரின் பன்முகத் திறமைகளைப் பாராட்டி ''கலாபூஷணம் வித்துவான்'' விருதும் அளிக்கப்பட்டது.

உயர்ந்த இலட்சியங்களையும், சிந்தனைத் தெளிவையும், செயலாற்றும் திறனையும் பெற்றிருந்த திருவாளர் அருணாசலம் நமசிவாயம் அவர்கள் தன் வாழ்க்கையில் சந்தித்த இடர்கள், பிரச்சினைகள் யாவற்றையும் புன்னகையுடன் எதிர் கொண்டு வெற்றி கண்டாரெனின் அதன் இரகசியம் அவர் தம் வாழ்வில் கைக்கொண்ட அமைதி நிறைந்த, தூய்மையான இறை பக்தியேயாகும். ''கருமம் செய், பலனை பகவானுக்கே விட்டுவிடு'' என்ற கர்மயோகத் தத்துவமே அவர் வாழ்வு - அவர் வெற்றி.

அன்னாரின் பூதவுடல் மறைந்தாலும் அவரது புகழுடல் என்றும் வழிகாட்டும் என்பது திண்ணம். ஆகையினால் அமரர்.நமசிவாயம் அவர்களின் ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஆண்டவனைப் பிரார்த்திப்போமாக.

''கலாபூஷணம்''
செல்லத்தம்பி மாணிக்கவாசகர்



ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே

# பஞ்சபுராணம்

திருச்சிற்றம்பலம்

## தேவாரம்

தாயினும் நல்ல தலைவரென்றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினும் மனத்தும் மருவி நின்றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயினும் பிணியும் தொழிலர்பால் நீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமாமலை அமர்ந்தாரே

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்கு
செம்மையே யாய சிவபதமளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவதினியே.

## திருவிசைப்பா

கலைகடம் பொருளும் அறிவுமாய் என்னைக்
கற்பினிற் பெற்றெடுத் தெனக்கே
முலைகடந் தருளுந் தாயினும் நல்ல
முக்கணான் உறைவிடம் போலும்
மலைகுடைந் தனைய நெடுநிலை மாட
மருங்கெலாம் மறையவர் முறையோத்
தலைகடல் முழங்கும் அந்தண்நீர்க் களந்தை
அணிதிகழ் ஆதித்தேச் சரமே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டியழுதிடப்
பாற்கடலீந்த பிரான்
மாலுக்குச்சக்கரமன்றருள் செய்தவன்
மன்னியதில்லை தன்னுள்
ஆலிக்குமந்தணர் வாழ்கின்றசிற்றம்
பலமேயிட மாகப்
பாலித்துநட்டம் பயிலவல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## பெரியபுராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகிறார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்துபாடி
அறவா நீ ஆடும்போது உன் அடியின் கீழ் இருக்க என்றார்.

## திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணர்நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திறிபாதா
வெற்றிவே லாயுதப் பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்



# பிள்ளைகளின் உணர்வுமிக்க உள்ளக் குமுறல்....

அப்பா...! ஆம் அப்பா, அப்பா எனும் நான்கு எழுத்துக்களில் உங்கள் நற்குணங்களை எடுத்துக் கூறலாம். அ - அன்பு, அறிவு, அரவணைப்பு. ப் - பரிவின் உச்சம், பா - பாசம், இவை சோடிப்பல்ல உண்மையே...

மாதா, பிதா, குரு, தெய்வம். இவை யாவரும் அறிந்ததே. பண்டைய இலக்கண இலக்கியங்களில் இவ்வொழுங்கில் அமையப் பெற்றவை. முதலாவதாக கூறப்படும் மாதா - எம் மாதாவுக்கு சிறந்த பாசமிகு துணைவராக வாழ்ந்தீர்கள். பிதா - எமக்கு நல்ல தந்தையாகவும், குருவாகவும் கூட எம்மருகில் இருந்தீர்கள். குரு - எத்தனையோ உங்கள் மாணவர்களுக்கு சிறந்த ஆசானாக இருந்தீர்கள். நாற்பத்தொரு வருட பள்ளி வாழ்வில் எத்தனை எத்தனையோ சிறந்த மாணவர்களை உருவாக்கி, இன்று அவர்கள் உலகெங்கும் பரந்து நல்ல நிலைகளில் பதவி வகிக்கின்றார்கள் என்பதை அறியும் போது அவ்வளவு அளவு கடந்த சிறந்த ஆசானாக இருந்தீர்கள் என்று புரிகின்றது. தெய்வம் - நீங்கள் எமக்கு தெய்வம். இன்றும் எம்மை தெய்வமாக இருந்து காத்துக் கொண்டுதான் இருப்பீர்கள். இது நாம் அனைவரும் அறிந்த உண்மை.

நாம் ஏழ்வரில் நம்மிடையில் உயர்வு, தாழ்வு இன்றி அனைவருக்கும் சமமாகவே அன்பு காட்டினீர்கள். உங்கள் பரிவு பாசம் நம்முடன் மட்டுமின்றி பேரப்பிள்ளைகள் வரை வளர்ந்தன. உங்கள் பாசமிகு பேரப்பிள்ளைகள் பாட்டா, பாட்டா என்று இன்றும் கூட உங்கள் இழப்பைத் தாங்கமுடியாது தவிக்கின்றார்கள். பாசம் எனும் பிணைப்பின் எடுத்துக் காட்டே. நான்கு மாதத்திற்கு முன்பு நீங்கள் அனைவரையும் உங்களருகில் அழைத்து பார்த்துப்பேசி மகிழ்ந்தீர்கள்.

அன்பா...! உங்களைப் பற்றிக் கூறிக்கொண்டே போகலாம். உங்கள் இழப்பு நம்மை வதைக்கின்றது அய்யா...! வயசு போய்விட்டது தானே என்று கூட நம் மனதை தேற்றமுடியவில்லை. பிள்ளைகளை தேற்றுவதற்கு தாய், தந்தைக்கீடாக எவரும் இல்லை. ஆனால் இன்று எமக்கு நீங்கள் இருவரும் நம்மருகில் இல்லை... அய்யகோ... பாசத்திற்கும் ஓரளவு இருக்க வேண்டும். நீங்கள் பாசத்தின் உச்சம், அதனால்தான் நாம் இன்று உங்களை நினைத்து, நினைத்துத் தவிக்கின்றோம்.

உங்கள் மரணச்செய்து கேட்டு நம்முடன் தொடர்புகொண்ட உங்கள் பழைய மாணவர்களின் சிலரின் குமுறல்கள் இன்றும் எம் சிலரின் காதில் ஒலிக்கின்றன. ஒருவர் தொலைபேசியில் கதறினார் அய்யா! நீங்கள் நமசிவாயம் மாஸ்ரின் மகனா? அய்யோ நம் அருமை ஆசான் போய்விட்டாரா? அவர் சொன்னார் நீங்கள் இப்படிப்பட்ட ஒருவருக்கு மகனாக பிறக்க கோடி புண்ணியம் செய்திருக்க வேண்டும் என்று. இறுதியில் சொன்னார் அய்யா கடுமையானவர் ஆனால் மிகவும் அன்பானவர் என்று. இந்த இரு சொற்களிலும் எவ்வளவு உண்மை அடங்கியுள்ளது என்பது உற்றுச் சிந்தித்தால் புரியும். உங்களிடம் கல்வி பயின்ற ஒரு பழைய மாணவன், நம்மிருவரின் குருவாக இருந்தார். அவர் அன்று சொல்வார் தான் கொக்குவில் இந்துக்கல்லூரியில் உங்களிடம் கல்விகற்றதாவும், பள்ளிக்கு போக முன்னர் நம்வீட்டுக்கு ஒவ்வொருநாளும் வந்து, கரும்பலகையில் நீங்கள் பொதிக்கும் பத்து முதுமொழிகளையும், நற்சிந்தனைகளையும் பார்த்துவிட்டுத்தான் பள்ளி செல்வாராம்.

அப்பா... இப்படி எத்தனையோ கூறலாம். உங்கள் பொன் மொழிகள் யாவும் இன்றும் எம்காதில் ஒலிக்கின்றன. வாழ்க்கை என்றால் இப்படித்தான் வாழவேண்டும் என்பதுக்கு உங்கள் வாழ்வு எமக்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டும், வழிகாட்டியும் கூட.

அன்பின் உருவே! எம்மினிய ஆசானே! ஒழுக்கத்தின் வடிவமே! பாசமிகு தந்தையே...! நீங்கள் எவருக்கும் தீங்கு செய்யவில்லை. நினைக்கவும் இல்லை. ஆதலால் நீங்கள், உங்கள் ஆத்மா சிவபதம் சேர்ந்திருக்கும். என்றாலும் உங்கள் ஆத்மா இறைவனடி சேர வேண்டும் என்று எல்லாம் வல்ல பரம்பொருளை வேண்டுகின்றோம்.

- பிள்ளைகள்



# அறிவுசார் கல்விக்காய், அகமகிழ்வூட்டும் கலைக்காய்த் தடம்பதித்த ஆசானே!

அன்பான தந்தையாய், அறிவூட்டிய ஆசானாய், கலைபுகட்டிய கலாபூஷணமாய் வாழ்ந்த என் அப்பாவே! என்னை உங்களது மூத்த மகளாகப் பெற்றெடுத்து, எனது வளர்ச்சிப்படிகள் ஒவ்வொன்றிலும் கண்ணும் கருத்துமாயிருந்து, வழிகாட்டிய எனை வாழ வைத்தீர்கள். என்னையும் எனது சகோதர சகோதரிகளையும், எங்களது இளமைக் காலத்தில் நற்பழக்க வழக்கங்களையுடையவர்களாகவும், நல்ல பண்புள்ள பிள்ளைகளாகவும் வளர்த்தெடுக்க அம்மாவுடன் இணைந்து, பக்கத்துணையாயிருந்து, கண்டிக்க வேண்டிய இடத்தில் கண்டித்து, கருணை முகம் காட்டி வளர்த்தெடுத்தது இன்றும் என் மனதில் பசுமையாகவிருக்கின்றது.

கல்வியுடன் கலையையும் நான் கற்க, உங்களது ஆசிரியத் தொழிலின் மத்தியிலும், ஆற்றிய கலைத் தொண்டுகள், சமூகத் தொண்டுகளின்

நடுவிலும் அயராமல் ஊக்கமெடுத்து நுண்கலைப் பிரிவில் நான் கற்று வயலின் இசைப்பிரிவில் சிறந்து விளங்க பாதை அமைத்துக் கொடுத் தீர்களே! விடியற்காலையில் உங்களது புல்லாங்குழலின் இசை கேட்டு கண்விழிப்போமே. என்னென்று செல்வது உங்களுக்கிருந்த கலையார்வத்தை!

பிள்ளைகளாகிய எங்களது வாழ்வில், அதாவது கல்வி, தொழில், இல்லறவாழ்க்கை போன்றவற்றை அவற்றை அவற்றிற்குரிய காலத்தில் தந்தைக்குரிய கடமையிலிருந்து சிறிதும் வழுவாமல் ஆற்றி வைத்தீர்களே! பிள்ளைகளைத் தொடர்ந்து பேரப்பிள்ளைகளின் வளமான வாழ்விற்கும் வழிகாட்டி வைத்தீர்களே.

அம்மா, வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து இறைவனடி சேர்ந்த பின்பு பிள்ளைகளாகிய நாங்கள் உங்களுக்கு உற்றதுணையாயிருந்தோம். உங்களது வயது முதிர்ந்த காலத்தில் உங்கள் பக்கத்திலிருந்து உங்களைப் பராமரித்துப் பிள்ளையாகிய எனது கடமையை உங்களுக்கு ஆற்றியதில் மனநிம்மதியடைகின்றேன். உங்களது கதைக்கும் ஆற்றல் குறைவடைந்து கொண்டு வந்த பொழுது, நான் உங்களுடன் கதைக்கும் பொழுது, எனது முகத்தை உங்களது வசீகரக்கண்ணால் பார்த்துக்கொண்டேயிருப்பீர்களே.. இந்த நிகழ்வு என்றும் என் மனத்திரையை விட்டகலாது. கண்களால் கதைத்து இறுதியில் அமைதியான உறக்கத்தில் ஆழ்ந்து விட்டீர்களே!.

என் செய்வது! இயற்கையின் நியதி இதுதான் என்று எனது மனதைத் தேற்றிக் கொண்டு இறைவன் திருவடியில் ஏற்கனவே சாந்தியடைந்திருக்கும் அம்மாவுடன் நீங்களும் இணைந்து சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி! ஓம்சாந்தி!! ஓம்சாந்தி!!!

மகள் சிவசுந்தரி

# எங்கள் அப்பா

அப்பா அப்பா என்று அழைத்தழைத்து அப்பாவையே சுற்றிச் சுற்றித் திரிவதும், அப்பா செய்வது எல்லாமே நல்லவையே என்று என் சிறுபராயத்திலேயே அப்பாவை பின்பற்றி நடப்பதும் சிறிது ஞாபகம். அம்மாவும் இவைபற்றிச் சொல்லக் கேட்டிருக்கின்றேன். அப்பா நல்ல தந்தையாகவும், அம்மாவுக்கு உறுதுணையாகவும் இருந்து எங்களை நல்ல முறையில் வளர்த்தார்.

பிள்ளை வளர்ப்பில் கடினமான தன்மை வெளித் தோற்றத்திற்குத் தெரிந்தாலும் மிக மிக இளகிய மனமும் அன்பும் இரக்கமும் அரவணைப்பும் நிறைந்திருக்கும். அவற்றை அனுபவித்தால் அதன் உண்மையும் அதன் பெறுமதியும் தெரியும். அதனைப்பெறும் பேறுபெற்றவர்கள் நாங்கள். பிள்ளைகளாகிய நாங்கள் பிழை செய்து கண்டித்துவிட்டால், அவர் அதனைத் தாங்கிக் கொள்ள மாட்டார். அடுத்த கணமே எங்களை அணைத்து கண்கலங்குவார்.

ஒருமுறை எனக்கு பத்து பதினொரு வயது இருக்கும் என நினைக் கின்றேன். கண்டித்து விட்டார். பாடாசலை செல்லும் நேரம் ஆகையால் அப்பாவும் பாடசாலை சென்று விட்டார். நானும் சென்று விட்டேன். பாடசாலையில் அவரால் தன் கடமையைத் தொடர முடியாமல் தனது அதிபரிடம் அனுமதி கேட்டு எனது பாடசாலைக்கு வந்து என்னை அழைத்துக் கட்டியணைத்த பின்பு தான் அவரால் தனது கடமையைத் தொடர முடிந்தது. இப்படி ஒரு அப்பாவை எங்கு காணமுடியும். எல்லாப் பிள்ளைகளிடத்தும் எற்றத் தாழ்வற்ற அன்பு கொண்டவர். எல்லோரும் இங்கு ஓரிடத்தில் தனக்கு அருகில் வாழவேண்டும் என்பதே அவரின் ஆசை. இப்படி எத்தனையோ சொல்லில் அடங்கா.

அப்பா பேரப்பிள்ளைகளிடம் மிகுந்த பாசம் கொண்டவர். அவர்கள் நல்லபிள்ளைகளாக வளர்வதற்கும், படிப்பில் நன்றாக வருவதற்கும் நல்ல அறிவான கருத்துக்களைக் கூறுவார். தாய்மொழி கற்பதற்கும் சகல வழிகளிலும் உதவியாக இருந்து அவர்களை முன்னேற்றினார். இவ்வருடம் ஆனிமாதம் அப்பா சிறிது சுகயீனமாக இருந்தபோது பேரப்பிள்ளைகள் அவரைப் பார்க்க வந்தார்கள். பிள்ளைகள் பாட்டாவைப் பார்த்துவிட்டுத் திரும்பும் போது நீங்கள் நன்றாக இருப்பீர்களென வாழ்த்தி முத்தமிட்டு தன்னை மறக்கக் கூடாது எனக் கூறி அனுப்பி வைத்தார். இப்படியான பாட்டாவை வாழ்நாளில் மறக்க முடியுமா? அவர்கள் நீங்களின்றி கலங்கி நிற்கின்றார்கள்.

அப்பா தனது வாழ்வில் உண்மை, கட்டுப்பாடு ஒழுக்கம் நேர்மை, நேரம், தூய்மை, இறை நம்பிக்கை என்னும் நெறிகளைக் கைக்கொண்டு பலராலும் போற்றப்பட்டு நல்லமுறையில் வாழ்ந்தவர். அப்பாக்கு இடப்பட்ட நாமமும், அப்பா தேர்ந்தெடுத்த தொழிலும் (ஆசிரியர்) அத்துடன் ஒன்றிணைந்த கலையான புல்லாங்குழலும் (குரு - இசை) இரண்டும் இறைவனிடம் முன்சேர்க்கப்படுவதாக அமையப் பெற்றார். அத்துடன் அப்பா இறைவனடி சேர்ந்த நாளும் மிகவும் விஷேசமான நாளாக அமைந்ததும் குறிப்பிடத்தக்கதாகும். ஒரு பெரிய மகானால் கூறப்பட்ட வார்த்தைகளும், எங்கள் அப்பா இறைவன் திருவடியில் சேர்ந்திருப்பார் என எண்ணி நான் என் மனதை சிறிது ஆறுதல்படுத்தி எங்கள் அப்பாவின் ஆன்மா இறைவன் திருவடியில் சேரப் பிரார்த்திக்கின்றேன்

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

அன்பு மகள்
கலா

# வெள்ளையுள்ளங் கொண்ட அப்பா!

அன்பின் அப்பா, நீங்கள் எங்களை விட்டு நெடுதூரம் சென்றாலும் உங்கள் நினைவுகள் என்றும் நிழல் போல தொடர்கின்றது. நான் மழலையாய் இருந்த காலத்திலிருந்து நீங்கள் சொரிந்த அன்பிற்கு இந்த வாழ்க்கையில் ஏதும் இணையாகாது. உங்களின் இளைய மகளாய் நான் பிறந்தது என் வாழ்க்கையில் செய்த தவப்பயனாக உணர்கின்றேன். என் மழலை வயதில் என்னைச் சீராட்டி வளர்த்தாக அம்மா சொல்லிக் கேட்டிருக்கின்றேன். அந்த இனிய நாட்கள் மீண்டும் வராதா என்று ஏங்குகின்றேன். எனது சிறிய வயதிலிருந்து நீங்கள் சொல்லித்தந்த ஒவ்வொரு அறிவுரைகளும், நற்பண்புகளும், ஆலோசனைகளும் என் நல்வாழ்க்கைக்கு அத்திவார கற்களாக அமைந்தன. கற்றோர், பெரியோர் உங்களின் மகள் என்று என்னை அழைக்கும் போது நான் அடையும் ஆனந்தத்திற்கு அளவேயில்லை நீங்கள் அணியும் வெள்ளை ஆடையைப் போல் உங்கள் உள்ளமும் வெண்மையானது அப்பா. நான் அப்பா என்று அழைக்க இனி ஒரு உறவு இல்லையென்றாலும் உங்கள் நினைவுகள் என்றும் என்னுடன் வாழும் உங்கள் ஆசீர்வாதம் என் குடும்பத்திற்கு என்றும் வேண்டும்.

இளைய மகள்
தர்மவதி
USA



# புண்பட்ட நெஞ்சானோம் !

அன்பெனும் சொல்லுக்கு வடிவமான மாமா
அதை எண்ணி அழுகின்றோம்
இன்று நாமெல்லோரும்.
எமை விட்டு நீர் அவசரமாய்
விண்ணுலகம் சென்றதேன்?
எத்தனை முறை அழுதாலும் எம் கவலை
தீராது மாமா.

நற்குழந்தைகளைப் பெற்று, நல்வழியில்
நடாத்தி நன்மணமும் எமக்கு செய்து
வைத்து எம் மாமாவாகினீர்!
தப்பாது எம்மையும் உம் பிள்ளைகள் போல் நடத்தி
தருணத்தில் எமை ஏன் தவிக்க விட்டீர் மாமா.

மக்களென போற்றினீர்,
மரியாதையாக நடாத்தினீர்
மாண்புடன் நாம் வாழ வழிகள்
பல காட்டினீர்
மனம் கலங்கி தவிக்கின்றோம் நாமெல்லோரும்
மாமா உங்கள் ஆத்மா சாந்திபெற
பிரார்த்திக்கின்றோம்.

மருமக்கள்

# பிள்ளைக்காகவும், பேரக்குழந்தைகளுக்காவும் உயிரைத்துச்சமென மதித்து கடமையாற்றிய கருணை உள்ளமே!

நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலை நாட்களில் கிழமைக் கணக்காக, மாதக்கணக்காக நான் தொழில் புரிந்த இடங்களிலிருந்து வந்து எனது மனைவியையும், பிள்ளைகளையும் சுகநலசேமங்கள் விசாரித்து, பராமரிக்க முடியாமலிந்த பொழுது, பெற்ற மகளுக்காகவும் பேரக்குழந்தைகளுக்காகவும் பகல் இரவு என்று பாராமல் எங்களது வீட்டிற்கு வந்து பார்த்துப் பேசி பாதுகாப்பு அரணாக இருந்தீர்கள். பயங்கரச் சூழ்நிலைகள் பற்றிக் கேள்விப்பட்டவுடன் மனம் பதைபதைக்க ஓடிவந்து மகளையும் பேரப்பிள்ளைகளையும் பார்த்து அவர்கள் நிலையறிந்து ஆகவேண்டியவற்றைச் செய்து கொடுத்தீர்கள். அதன்பின்புதான் உங்கள் மனம் நிம்மதியடையும் அந் நிகழ்வுகளை என்னாலும் என் குடும்பத்தாலும் என்றும் மறக்க முடியாது.

உங்களுக்கு சுகநலக்குறைவு ஏற்பட்ட பொழுது, உங்களை நேரிற் பார்த்து உரையாடவேண்டுமென்ற ஆவலில் எனது இரு பிள்ளைகளும் வெளிநாட்டிலிருந்து வந்து உங்களுடன் கதைத்துப்பேசி மகிழ்ந்தார்களே. அதிலிருந்து விளங்கிக் கொள்ளக் கூடியதாகவிருந்தது அவர்களது ஆதங்கத்தை. நீங்கள் எப்படி அவர்களுக்கு அரணாய் இருந்தீர்கள் என்பதைப் பற்றியே கதைத்தார்கள். குழந்தைகளாய் அவர்கள் இருந்த பொழுது நடந்தவற்றை அவர்களால் மறக்க முடியவில்லை.

நீங்கள் எங்களுடன் இருந்த பொழுது, உங்களது செயல்களால் மருமகனாகிய எனக்கு எந்த இடையூறும் எற்படக் கூடாது என்பதில் மிகவும் கவனமாக இருந்தீர்கள். முக்கியமாக விடியற்காலையில் நான் எனது வேலைக்குப் புறப்படும் நேரத்தைக் குறிப்பிடலாம்.

நீங்கள் இவ்வுலகத்தை விட்டு நீங்குவதற்கு மூன்று நாட்களுக்கு முன்பு வைத்தியரை வரவழைத்து உங்கள் உடல்நிலையைப் பரிசோதித்து ஆகவேண்டியவற்றைச் செய்ததினால் எனது மனம் சற்று ஆறுதலடைகின்றது. தந்தையாய், மாமாவாய், பாட்டாவாய், வாழ்ந்துகாட்டிய உங்கள் வாழ்க்கை முறைகளையிட்டு நாங்கள் பெருமையடைகின்றோம். நல்லூரான் திருவடியில் சாந்தியுடன் சங்கமித்திருக்கும் மாமியை அடைந்து, நீங்களும் அப்பேறு அடைய நல்லூர் முருகனைப் பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி !!!

மருமகன் சிங்கராஜா

# உயிர்ந்த பண்பாளரான மாமா !

நான் பிறந்த நாளிலிருந்து பெற்ற தந்தையைப் போல் பாசத்தை ஊட்டி வளர்த்த என் மாமா (சின்னையா) நீங்கள் எங்களை விட்டு பிரிந்த செய்தி கேட்ட நாள் முதல் என் உள்ளம் துடியாய்த் துடிக்கின்றது. நான் பள்ளி செல்லும் நாட்களில் நீங்கள் என்னை தம்பி என்றழைத்து கூறும்கதைகள் இன்னும் காதில் ஒலிக்கின்றன. உங்கள் கம்பீரத் தோற்ற மும் உயர் பண்புகளும் என் வாழ்க்கையின் பாடப்புத்தகங்களாயின. உங்கள் பாச மகளை எனது மனைவியாக்கி என்னை பெரும் பாக்கியசாலியாக்கிய பெருமகனே. உங்கள் மகளை கரம்பிடிக்க முன்னரே உங்களை சின்னையா என்று அழைக்கும் போதெல்லாம் தம்பி என்று அன்பாக பதிலளிப்பீர்கள். அந்த இனிய குரலை நான் இனி எங்கு கேட்பேன். நீங்கள் சென்ற தூரம் தொலை தூரமாக இருந்தாலும் உங்கள் ஆசீர்வாதம் எங்கள் குடும்பத்திற்கும் என்றும் வேண்டும்.

மருமகன் சிவகுமார்(தம்பி)
USA

# மனதை விட்டகலாத நண்பன் !

புல்லாங்குழல் இசைமேதையும், எனது அன்புக்கினிய நண்பரும், எனது யாழ்.அண்ணாமலை இசைத்தமிழ் மன்றத்தினது ஸ்தாபகர்களில் ஒருவருமான திரு.அ.நமசிவாயம் அவர்களது இழப்பு இசையுலகத்திற்குப் பேரிழப்பு ஆகும். 1958ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட அண்ணாமலை இசைத்தமிழ் மன்றத்தினது அனைத்துச் செயற்பாடுகளிலும் குறிப்பாக வகுப்புத்திட்டங்கள், இசை விழாக்களின் போது என்னோடு இணைந்து தனது உளப்பூர்வமான செயற்பாட்டினை அர்ப்பணிப்புடன் வழங்கியுள்ளார். மன்றத்தின் முக்கிய பதவிகளான தலைவர், செயலாளர் ஆகிய பதவி களை அலங்கரித்து எல்லோரிடமும் அன்புடனும், பண்புடனும் பழகி மன்ற வளர்ச்சிக்காகப் பாடுபட்டவர்.

அவர், பயிற்றப்பட்ட ஒரு பாடசாலை ஆசிரியராக இருந்த போதிலும் கூட இசையின் மேல் கொண்ட நிறைந்த விருப்பினால், புல்லாங்குழலைக் கற்றுக்கொண்டு, சிறந்த முறையில் கச்சேரி செய்யுமளவிற்குத் தன்னை வளர்த்துக் கொண்டது மட்டுமல்லாது, சிறந்ததொரு குருவாக அமைந்து நல்ல மாணவர்களினை உருவாக்கியுள்ளார்.

என்மீது தனிப்பட்ட அன்பும், நட்பும் கொண்டு உரிமையுடன் பழகுவார். 'பாலா' என்று அவர் என்னை பரிவுடன் அழைப்பது இன்றும் எனது காதில் ஒலிக்கின்றது. அவருடன் பழகிய அந்த நீண்ட வருட ஞாபகங்கள் என்றும் மறக்க முடியாதவை. 2010ம்ஆண்டு நான் கொழும்புக்குச் சென்றிருந்த போது அவர் என்னைச் சந்தித்தார். நீண்ட காலத்தின் பின்னரான அச்சந்திப்பின் போது, மிக்க மகிழ்வுடனும், மனச்சுமையுடனும் கடந்த காலங்களை அலசினோம்.

இன்று அவர் எம்மை விட்டுப் பிரிந்தாலும், நல்ல நினைவுகளாலும், தமது மாணவப் பரம்பரையாலும் என்றும் வாழ்ந்து கொண்டிருப்பார். அவரது

ஆத்மாசாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். அவரை இழந்து தவிக்கும் அவரது குடும்பதினருக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சங்கீத பூஷணம்
ச.பாலசிங்கம்

# பிரார்த்தனையுரை

அமரர் கலாபூஷணம் அருணாசலம் நமசிவாயம் அவர்கள் தமக்கென ஒரு தனித்துவமான வாழ்க்கைமுறையை அமைத்துக் கொண்டு நல்லவண்ணம் வாழ்ந்த ஒரு மாமனிதர் ஆவார். ஆசிரியத்துவப் பணியை விரும்பியேற்று, மனித ஆக்கத்திற்கு அருஞ்சேவையாற்றியவர். நல்லாசிரியருக்குரிய அகப்புற இலட்சணங்களுடன் காட்சியளித்தவர். அவரின் நடை, உடை, பாவனைகள் யாவும் அவரின் ஆளுமையைத் துலங்க வைத்தன. ஏனையோருக்கு முன் மாதிரியாகவும் விளங்கினார். சைவத் தமிழ்க் கலாசார விழுமியங்களைப் பெரிதும் போற்றி, வாழ்க்கையிலும் பின்பற்றி வாழ்ந்து காட்டினார். தனக்குச் சரியெனத் தோன்றியவற்றை, நேருக்குநேர் நின்று, தைரியமாக எடுத்துரைத்து, மற்றையோரை வழிப்படுத்தும் இயல்பினர். அதேவேளை மென்மையான உணர்வுகளையும் உள்ளத்தில் கொண்டிருந்தார். அது அவரின் கலைத்துவத்தின் பிரதிபலிப்பு ஆகும்.

புல்லாங்குழல் இசை வித்துவானாகத் திகழ்ந்த அமரர் நமசிவாயம் அவர்கள், அதனைக் காதலித்து, ஆராதித்துப் பூசித்து வந்த பெருங்கலைஞர் ஆவார். அது ஒரு தெய்வீகக் கலையெனப் போற்றியவர். ''வேணுகானமணி'' எனும் பட்டத்தையும் பெற்றவர். தம்மை நாடிவந்த மாணாக்கர்களுக்குப் புல்லாங்குழல் இசை நுணுக்கங்களையெல்லாம், ஒழிப்பு மறைப்பின்றி கற்பித்துப் பல புல்லாங்குழல் கலைஞர்களை உருவாக்கிப் பெருமை

பெற்றவர். ''ஈதல் அறம்'' ''ஈதல் இசைபட வாழ்தல்'' எனும் நம் ஆன்றோர் மொழிந்த விழுமியங்கள் அவரை ஈர்த்தன போலும். கலையைக் கற்பித்தல் சிறந்த ஈகையாகும். எமது புதல்வர்கள், செந்தில்குமார், ராம்குமார் இருவரும் அவரிடம் புல்லாங்குழல் இசை கற்றுத் தேர்ச்சி பெற்றவர்கள். கற்பித்தலில் மிகுந்த சிரத்தையும், கண்டிப்பும் அதேவேளை கருணையும் நிறைந்திருக்கும்.

''தம்மின் தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது'' - திருக்குறள்

மேற்படி வள்ளுவர் வாக்குக்கு அமையத், தம்மிலும் தம் மாகாணக் கர்கள் புல்லாங்குழல் இசையில், புலமையும் மேன்மையும் பெற்று விளங்க வேண்டும் என்னும் தூய மனப்பாங்கினை அவர் கொண்டிருந்தமை நான் அவருடன் பழகிய காலத்தில் அறிந்துகொண்டேன். அவரின் பெருந்தன்மை போற்றுதற்குரியது.

ஒரு முறை எழுத்தாளரும் விமர்சகரும் ஆக விளங்கிய நவாலியூர் சச்சிதானந்தன், அமரர் நமசிவாயம் அவர்களின் இல்லத்திற்கு வருகை தந்திருந்தார். அவ் வேளை எமது புதல்வர்களை அழைத்து அந்த விமர்சகர் முன்னிலையில் புல்லாங்குழல் வாசிக்கும்படி பணித்தார். நவாலியூர் சச்சிதானந்தன், எமது புதல்வர்களின் புல்லாங்குழல் இசையைக் கேட்டு வியந்துபாராட்டி விமர்சனம் எழுதி பத்திரிகையில் அவர்களின் புகைப்படங் களுடன் பிரசுரித்திருந்தார். அதனை வாசித்து நாம் எல்லோரும் மகிழ்ந்தோம். அவர்களின் குருவாக விளங்கிய அமரர் நமசிவாயம் அவர்கள் பெருமகிழ்ச்சி எய்தி அவர்களை வாழ்த்திப் பாராட்டிய நிகழ்வு இன்னும் என் நினைவில் பசுமையாக உள்ளது. பெருந்தகை அமரர் நமசிவாயம் அவர்களின் ஆத்மா, சாந்தியடைய இறைவனை வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி

16- 6/2, வன்டர்வேர் பிளேஸ்,
தெஹிவளை

குமாரசாமி சோமசுந்தரம்
மற்றும் குடும்பத்தினர்

# குடும்பத்தின் கலங்கரை விளக்கு

ஆல்போல் தழைத்து பெருமரமாய் நின்றீர்
குடும்பத்தின் கலங்கரை விளக்காக
குதூகலித்திருந்தீரே
வண்ணச் சிரிப்பொலியால் யாவரையும்
கவர்ந்தீரே
மௌனமாகி இன்று மீளாத் துயில்கொண்டீரே

மடிமேலிருத்தி உங்கள் அன்பு
பிள்ளைகள் பெற்றெடுத்த எமக்குப்
பிடிசோறு ஊட்டிவிட்டு படிப்பதற்கு
சென்றமர்ந்தால் பாடங்களை விளக்க
வைத்து அடிக்கடி ஆசைதீன் பண்டங்களை
வாங்கித்தந் தெம்மை வளர்த்த தெய்வமே.

பெருமையோடு பேரப்பிள்ளைகளே
என்றழைத்து அருமையோடு முத்தங்கள்
அன்புடன் தந்தீரே!



மரணம் என்பது மறுவாழ்வின் ஆரம்பம்
பழைய உடல் மாற்றி புதிய உடல்
பெற்று நெருக்கமான பாசப்பிணைப்பை
எம்மிடையே பகிர்ந்திட
விரைந்திங்கு வந்திடுவீர்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றென்றும் பிரார்த்திக்கும்

பேரப்பிள்ளைகள்

# பாட்டாவுடனான உறவும், பசுமையான நினைவுகளும்...

மானிட வாழ்வில் பிறப்பிற்கும் இறப்பிற்கும் இடையில் எவ்வாறு ஒருவன் வாழவேண்டும் என்பதை கற்றுத் தந்தது பாட்டாவின் வாழ்க்கைப் பாடம். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு இவை மூன்றையும் தன்னகத்தே கொண்டு வாழ்ந்த பெருமனிதர் இவர். என் சிறு பராயத்தில் தமிழ் புத்தகங்களிலிருந்து கற்றுக்கொண்ட பொன்மொழிகளை விட பாட்டாவின் நாவினால் கேட்ட அம்மொழிகளில் சிலவே இன்றும் என் நினைவில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் மீது அவர் கொண்ட அன்பிற்கும் அக்கறைக்கும் அளவே கிடையாது.

''அன்பிற்கும் உண்டோ அடைக்குந் தாழ்''

என்ற முதுமொழி, பாட்டா எம்மீது காட்டிய அன்பிற்கு சாலவே பொருந்தும்.

யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த காலங்களில் பாட்டா மணல்தறை வீட்டிலும் நாம் நல்லூர் வீட்டிலுமாக இருந்த காலங்களில் வான் பிளந்து வரும்போர் விமானங்களின் இரைச்சல்களும் குண்டுச் சத்தங்களும் ஓயும் முன் எம் வீட்டு ஒழுங்கை முடக்கில் கேட்கும் அவரின் Honda வின் சத்தம். இதுபாட்டா எம்மீது கொண்டிருந்த அக்கறைக்கு ஓர் எடுத்துக்காட்டு.

யாழ்ப்பாணத்தில் மிகச் சிறந்த புல்லாங்குழல் விற்பன்னராகவும் பிரபல பாடசாலைகளில் நல் அசானாகவும் சேவையாற்றிய இவர் எம் குடும்பத்திலும் சங்கீத ஞானத்தை விதைத்தார். ஓர் ஆண்பிள்ளையாக இருந்து தன்னுடைய தாய் தகப்பனுக்கு அவர்களின் இறுதிக்காலங்களில்

செய்ய வேண்டிய சேவைகளை செவ்வனே செய்த இவர் தன்னுடைய இறுதிக் கால கட்டங்களில் தன் பிள்ளைகளும் தனக்கான சேவையினை செவ்வனே செய்ய வேண்டுமென மிகவும் எதிர்பார்த்திருந்தார். இப்பேற்பட்ட பெரியாரின் வாழ்க்கையின் ஒரு காலப் பகுதியில் எமக்கு வாழக் கிடைத்ததும், அவர் எமக்கு பாட்டாவாக கிடைத்ததும் நாம்பெற்ற பெரும் பேறே.

''நல்லதையே நினை, நல்லதையே செய்' என்ற வாசகத்தை சொல்லிச் சொல்லி வாழ்ந்து காட்டிய எங்கள் பாட்டாவின் வழியில் அவரின் வம்சத்தில் வந்த நாங்களும் இனி வரும் அவரின் சந்ததியினரும் வாழ எங்களின் அன்புப் பாட்டாவின் ஆசீர்வாதத்தை வேண்டி அவரின் ஆத்மா சாந்தியடைய எங்கள் குலதெய்வமான வைரவப்பெருமானை வேண்டி நிற்கின்றேன்.

பேரன்
சி. சாரங்கன்



"உள்ளே (இதயத்தில்) ஈசுவரனை உணர்பவன் புறம்பேயும்
அவனைக் காண்பான். ஆகவே தேக ஆலயத்தில்
தெய்வத்தைக் காண்பவன் அகிலத்திலேயும்
அவனைக் காண்பான்."

- இராமகிருஸ்ணர்

# என் அன்புப் பாட்டா!

என் அன்பு பாட்டா எங்களைப் பிரிந்து எங்கு சென்றுவிட்டீர். உங்களைத் தேடி எங்கும் அலைகின்றோம். யாரால் எங்கள் பாட்டாவின் நினைவுகளை மீட்டுத்தர முடியும். எனக்கு நாமம் சூட்டி அன்பாக அரவணைத்து செல்லமாக வளர்த்தீர்கள். உங்கள் அருகிருந்து வளர்ந்தது நான் செய்த தவப் பயனாக உணர்கின்றேன். என்னை யாரென்று அடையாளம் கேட்கும் போது உங்களின் பேரனென்று என்னை அடையாளப்படுத்தி பெருமை கொள்வேன்.

நீங்கள் வாழ்ந்த இடமெல்லாம் உங்கள் புகழ்பாடுகின்றன. நீங்கள் உங்கள் வாழ்க்கையில் கடைப்பிடித்த உயர்ந்த பண்புகள் என்னை மெய்சிலிர்க்க வைக்கின்றன. ஆள் பாதி ஆடைபாதி என்ற கொள்கையோடு நீங்கள் உடுத்திய வெள்ளாடையின் அழகு என் மனதில் பசுமையாக இருக்கின்றது. நீங்கள் வரைந்து தந்த ஓவியம் எழுதித்தந்த கட்டுரைகள் கவிதைகள் என் பாடசாலை நாட்களில் பெரும் புகழைத் தேடித்தந்தன. குண்டு வீச்சு விமானம் வானத்திலிருந்து மறையும் முன் எங்களின் நல்ன்காண உங்கள் உயிரைப் பொருட்படுத்தாது எங்கள் வீடு தேடி வருவீர்கள். காலத்தின் கட்டாயத்தில் பல்லாயிரம் மைல்களுக்கு அப்பால் வாழ்ந்த போதெல்லாம் எங்கள் நினைவுகளை சுமந்தே வாழ்ந்தீர்கள். உங்கள் உடல் எங்களை விட்டுப் பிரிந்தாலும் உங்கள் நினைவுகள் என்றும் எங்களுடன் பயணிக்கும்.

பேரன்
சி.லளிதறூபன்

# பாட்டா !

நீங்கள் எங்களை விட்டு போனது மிகத் துயரமாக இருக்கின்றது. ஆனால் நீங்கள் இப்பொழுது இறைவனடியில் அம்மம்மாவுடன் இருப்பீர்கள் என்ற நம்பிக்கை, எங்களுக்குக் கிடைக்கும் அமைதி.

இந்த வாழ்வில் நீங்கள் பலருக்கு எத்துக்காட்டாக இருந்தீர்கள்.

ஆசிரியராக,

ஆயிரக்கணக்கான மா்ணவர்கள் உங்களிடம் பாடம் கற்றுக் கொண்டார்கள். இது உலகில் மிகச் சிறந்த தொழில். ஒரு ஆசிரியர் எங்கள் வாழ்வில் மறக்க முடியாத உறவு.

“அன்னையும் பிதாவும் குருவும் முன்னறிதெய்வம்” என்பதற்கிணங்க நாங்கள் மூன்றையும் உங்களிடத்திலிருந்து அனுபவித்திருக்கின்றோம்.

சிறிதுகாலம் எங்களுக்கு தமிழ்ப் பாடங்கள் கற்பித்தீர்கள். ஆனாலும் நீங்கள் அம்மம்மாவுடன் இங்கு வாழும்பொழுது எங்களை தாய் தந்தை போல் பார்த்துக்கொண்டீர்கள்.

- ஒவ்வொருநாளும் பாடசாலைக்குப் போய்வரும் போது நேரத்துடன் வீட்டிற்கு வருவதைக் கவனிப்பீர்கள்.
- பரீட்சையில் நல்ல மதிப்பெண்கள் கிடைத்தால் நன்றாகப் பாராட்டுவீர்கள்.
- ஒவ்வொருவருக்கும் ஏற்ற அன்பை, கவனிப்பை, பாராட்டுக் களை நன்றாகச் செலுத்தி எங்களை வளர்த்து விட்டீர்கள்.

நாங்கள் வெளிநாட்டில் பிறந்து வளர்ந்தாலும் ஒரு தமிழன் எப்படி வாழவேண்டுமெனக் கற்றுத் தந்து கடவுள் பற்று, விருந்தோம்பல், குடும்பப்பற்று, மற்ற மனிதர்களின் வாழ்க்கையை மதிப்பது, பெண்ணை மதிப்பது, சுய உடலைக் கவனிப்பது (உடற்பயிற்சி, யோகாசனம்) கலைப்பற்று (சங்கீதம், பரதநாட்டியம், புல்லாங்குழல், ஓவியம்) போன்ற விடயங்களையும் நீங்கள் வாழ்ந்த வாழ்க்கை மூலம் அறியத் தந்தீர்கள்.

அதற்கு முன் எங்களுக்கு மறக்க முடியாத சொத்துக்கள் உங்கள் மன இரக்கமும் அன்பும் பாட்டா. அவை எங்கள் இதயத்தில் எப்பொழுதும் பதிந்து இருக்கின்ற பொக்கிசங்கள். அதற்கு எங்கள் எல்லையில்லாத நன்றிகள் பாட்டா.

அன்புள்ள பேரப்பிள்ளைகள்
அபிராமி, ராகவன்
(பிரான்ஸ்)

## சிந்தனைத் துளிகள்

- பிறருக்கு நன்மை செய்ய பிறந்த நீ நன்மை செய்யா விட்டாலும் தீமையாவது செய்யாதிரு
- நேற்று என்பது அனுபவம் இன்று என்பது நிகழ்வு நாளை என்பது நம்பிக்கை
- முயற்சிகள் தவறலாம் ஆனால் முயற்சிக்க தவறக் கூடாது
- பகைவனின் புன் சிரிப்பை விட நண்பனின் கோபம் நன்று
- பணிவு மனிதனின் வாழ்வை உயர்த்தும் பொன்னிலும் பார்க்க பொழுது மிகப் பெரிது
- சிரிக்காத நாள்தான் ஒருவன் தன் வாழ்க்கையில் வீணாக்கி விட்ட நாட்களில் மிகவும் மோசமான நாட்களாகும்
- உலகம் ஆயிரம் சொல்லட்டும் உனக்கு நீதான் நீதிபதி மனிதன் எதையோ பேசட்டுமே உன் மனதை பார்த்து கொள் நல்லபடி
- உனது எச்சரிக்கையை அச்சுறுத்தும் வலுவான ஆயுதங்கள் உன் மௌனமும் பொறுமையும்

# என் அருமைப் பாட்டா!

எப்படியும் வாழ்வது வாழ்க்கை அல்ல
இப்படித்தான் வாழவேண்டும். இது இலகு அல்ல
பெருமைகள் வரலாம், பெறாமையும் வரலாம், போட்டியும் வரலாம்
எவைவரினும் வாழும் முறைப்படி வாழ்வேன்,
என வாழ்ந்து காட்டினார் எம் அருமைப் பாட்டா.

எழுத்துத் ·தமிழ் பேச்சுத் தமிழாகத் தவழும்
சிந்தனைகள் சிறந்தவற்றை சுற்றியே சிறகடிக்கும்
தள்ளாத வயதிலும் எம்மைக் கண்டிப்புடன் கவனிப்பார்
வகுப்பு முடிந்து வரும் வரை வாயிற் கதவை நோக்கியிருப்பார்.

வாத்தியாராகவும், புல்லாங்குழல் வித்துவானாகவும், எழுத்தாளனாகவும்
புகழோடு வாழ்ந்த எம் அருமைப் பாட்டா
சிறந்த குடும்பத் தலைவனாக தன் கடமையினை
பொறுப்புடன் நிறைவேற்றினார், பூரிப்படைகின்றோம்.

இறப்பு எனும் இழப்பு வாழ்வில் நிச்சயம், நாமறிவோம்
நாமறிய நிகழும் போது தாங்க முடியாது தவிக்கின்றோம்.
பாட்டா காட்டிய வழி, பாடப்புத்தகமாக எம்மனதில்
தாள் வணங்குகின்றோம் பாட்டா நமசிவாயத்தின்.

உங்கள் பேரன்
ம.சுஜீவன்

# என் பாட்டா!

பாட்டா சிறுவயதில் உங்கள் கைபிடித்து நடக்கும் வாய்ப்பு
கிட்டவில்லை - ஆனாலும் உங்கள் சுவடுகளை பின்பற்றி நடந்தேன்.
நான் ஆறுமாத குழந்தையாக இருக்கையில் நீங்கள் கூறிய
ஜதி - என் கலையார்வத்திற்கு பிள்ளையார் சுழியிட்டது.
உங்கள் கடைசிக் காலத்தில் இலங்கையில் எங்களுடன்
இருக்கையில் - நான் சமய பாடத்தில் கற்றவை உங்களில்
செயலாக்கம் அடைவதை கண்டேன்.
நாங்கள் செய்யும் சாதனைகளைக் கண்டு பூரிப்படைவதும்
தவறுகள் இழைக்கையில் கண்டிப்பதும் உங்கள்
கடமைகளில் நீங்கள் தவறுவதில்லை என்பதை காட்டின.
உங்கள் பிள்ளைகளுக்கு சிறு வருத்தம் ஏற்பட்டால்
அவர்களை இரவிரவாக அம்மம்மாவுடன் கண்விழித்திருந்து
கவனிப்பதுடன் சில சமயங்களில் இரவு மூன்று நான்கு
தடவைகள் car பிடித்து மருத்துவரிடம் அழைத்துச் செல்வீர்கள்
என உங்கள் பிள்ளைகள் கூற கேட்டிருக்கின்றேன் - ஆனால்
அம்மாவிற்கோ எங்களுக்கோ சிறு வருத்தம் என்றால் நீங்கள்
அடிக்கடி அக்கறையுடன் விசாரிப்பதும் கண் கலங்குவதும்,
நான் கண்முன் கண்டவை.
நீங்கள் கூறும் பழமொழிகளும் அறிவுரைகளும், என்றும்
எம்மை விட்டு அகலா - பல தமிழ்ச்சொற்கள் உங்கள்
நாவால் உதிரும் போது அவற்றை அன்றுதான் முதலில்
செவிமடுத்திருந்தேன்.

நீங்கள் எம்மை விட்டு பிரிந்தாலும்
பாட்டா உங்கள் நினைவுகள் எப்பொழுதும் எம்முடன்

உங்கள் பேத்தி
ம.வைஷ்ணவி

# MAYURAN'S CONDOLENCES

I can't believe you are gone Grandpa! Words cannot explain my love to you. You put a smile on everyone face. You always made me feel excited, joyful and many more.

When you came to America for the first time, I was speechless because it was your first time and you came to see me. That time was precious memory for me that I will never forget. Another part that my grandpa told me was to focus everyday and I will succeed in the future. Sometimes you get angry with me for no reason but it was good memories. Whenever my mom talks to her father on the phone, I always ask to talk to grandpa because he was awesome. After you passed away grandpa, my mom was crying a lot and felt depressed. Well grandpa, now you lived great life and now god has taken you to a better place where you could live peacefully and watch us from heaven. Take care grandpa and I will always remember the precious memories we had together. RIP GRANDPA <3

Grandson,
Mayuran (USA)

# DEAREST APPAPPAH,

Thank you for the gift of true love you have rendered me through all your life. You had many precious advices to give, all in a caring way. Appappah, I love to hear your voice that echoes with brimming love and concern. My Adoring Appappah, watch over me, protect me, in every step I take leading me the proper path. I miss you so much, I love you up to the limitless sky.

Your loving grand daughter
Metha



# கீதாசாரம்

எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்? எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்? அதை நீ இழப்பதற்கு?

எதை நீ படைத்திருந்தாய், அது வீணாகுவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ, அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்.

" இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமுமாகும் "

~ பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் ~

Fast Printers : 289-1/2, Galle Road, Colombo - 06 T.P-0112362312.